

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் மறைந்த முரசொலி செல்வத்தின் 2 ஆம் ஆண்டுநினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜய குமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

2026 ஆம் ஆண்டின் அமைதிக்கான

நோபல் பரிசு வென்ற தமிழ் வம்சாவளி நவநீதம் பிள்ளை!

ஜெனிவா, அக்.11-

2026ம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு, தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த தமிழ் வம்சாவளி சட்ட நிபுணர் நவநீதம் (நவி) பிள்ளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதி மற்றும் சர்வதேச சட்டத்தை மேம்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

நவநீதம் பிள்ளை 1941ம் ஆண்டு செப்டம்பர் 23ந்தேதி தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகரில் உள்ள கிளேர்வுட் பகுதியில் பிறந்தார். இவரது தாத்தா, பாட்டி 19ம் நூற்றாண்டில் கரும்பு வெட்டும் கூலித் தொழிலாளர்களாகத் தென்னாப்பிரிக்காவுக்குக் குடிபெயர்ந்தனர்

வறுமையான குடும்பப் பின்னணியில் வளர்ந்த நவநீதம் பிள்ளையின் தந்தை பஸ் டிரைவராகப் பணியாற்றினார். பல்வேறு சவால்களுக்கு இடையிலும் கல்வியில் கவனம் செலுத்திய அவர், டர்பனில் உள்ள பில்லே நடால் பல்கலைக்கழகத்தில் பயின்று, 1963ல் இளங்கலைப் பட்டத்தையும் (BA), 1965ல் சட்ட இளங்கலைப் பட்டத்தையும் (LLB) பெற்றார். பின்னர், 1982ல் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சட்ட முதுகலைப் பட்டத்தையும் (LLM), 1988ல் சட்ட அறிவியல் முனைவர் பட்டத்தையும் (Doctor of Juridical Science) பெற்றார்.

இனவெறிக்கு எதிராக போராட்டம்!

தென் ஆப்பிரிக்காவில் இனவெறி ஆட்சி நிலவிய காலகட்டத்தில், நிறவெறியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நவநீதம் பிள்ளை சட்டப் போராட்டங்களை முன்னெடுத்தார்.

1967ம் ஆண்டு, நடால் மாகாணத்தில் சொந்தமாக சட்ட அலுவலகம் தொடங்கிய முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றார். இனவெறி ஆட்சிக்கு எதிராகப் போராடியவர்கள், அரசியல் கைதிகள் உள்ளிட்டோருக்காக வாதாடினார்.

காவலில் இருப்பவர்களுக்கு இழைக்கப்படும் சித்ரவதைகள், தனிமைச் சிறைவாசம் மற்றும் கைதிகளின் உரிமைகள் தொடர்பான வழக்குகளிலும் அவர் தீவிரமாகச் செயல்பட்டார். 1995ம் ஆண்டு தென் ஆப்பிரிக்க உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் வெள்ளையரல்லாத பெண் என்ற பெருமையை பெற்றார்.

ருவாண்டா இனப்படுகொலை!

ருவாண்டாவில் 1994ல் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் நீதிபதியாக நவநீதம் பிள்ளையை ஐ.நா. பொதுச்சபை தேர்ந்தெடுத்தது. அவர் எட்டு ஆண்டுகள் தீர்ப்பாயத்தில் பணியாற்றியதுடன், 1999 முதல் 2003 வரை அதன் தலைவராகவும் இருந்தார்

ருவாண்டா இனப்படுகொலை வழக்கில் பாலியல் வன்முறையும், குறிப்பிட்ட ஒரு இனக்குழுவை அழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டால், அது இனப்படுகொலையின் ஒரு பகுதியாகக் கருதப்படலாம் என்பதை உறுதிப்படுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க ஜீன் பால் அகாயேசு வழக்குதீர்ப்பில் அவர் முக்கியப் பங்காற்றினார்.

இந்த தீர்ப்பு சர்வதேச குற்றவியல் சட்டத்திலும், பாலியல் வன்முறையை ஒரு கொடூர குற்றமாக அங்கீகரிப்பதிலும் முக்கிய முன்னேற்றமாக இது அமைந்தது.பின்னர், 2003 முதல் 2008 வரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பணியாற்றினார்.

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர்!

2008ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையராக நவநீதம் பிள்ளை பொறுப்பு வகித்தார்.

இந்தக் காலகட்டத்தில், பெண்களின் உரிமைகள், இனப் பாகுபாடு, ஆயுத மோதல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளில் சர்வதேச அளவில் குரல் கொடுத்தார்.

1992 ஆம் ஆண்டு மனித உரிமை கட்டமைப்பில் பெண்களின் உரிமைகளை மேலும் உறுதியாக நிலைநிறுத்து வதற்காக வழக் கறிஞர்க்ளுடன் இணைந்து ஈக்வாலிட்டி நவ் (Equality Now) என்ற அமைப்பை நிறுவினார்

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஐ.நா. சுதந்திர மான சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவராக 2021ம் ஆண்டு நவநீதம் பிள்ளை நியமிக்கப்பட் டார்.

2025ம் ஆண்டு செப்டம்பரில் வெளியான அந்தக் குழுவின் அறிக்கை, காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டதாக முடிவு செய்தது. இந்தக் குற்றச்சாட்டுகளை இஸ்ரேல் நிராகரித்தது. அந்த அறிக்கை நீதிமன்றத் தீர்ப்பு அல்ல என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும், ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக மியான்மர் இனப்படுகொலை ஒப்பந்தத்தை மீறியதாக காம்பியா தொடர்ந்த வழக்கில், சர்வதேச நீதிமன்றத்தில் சிறப்பு நீதிபதியாகவும் அவர் செயல் பட்டு வருகிறார். 2019ல் முறையாக அந்தப் பொறுப்பில் நீதிபதியாக பொறுப்பேற் றார்

வறுமையான குடும்பத்தில் பிறந்து, இனவெறிக்கு எதிராகப் போராடி, சர்வதேச நீதித் துறையில் முக்கியப் பொறுப் புகளை வகித்து, தற்போது அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ள நவநீதம் பிள்ளையின் பயணம் உலகம் முழுவதும் மனித உரிமைகளுக்காகப் போராடுபவர்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.



வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டு மதுரை ரோட்டில் கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணியை துரிதபடுத்துவதற்கு அறிவுறுத்தினார்.உடன் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், உள்ளிட்டர் உடன் இருந்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்

லயன் வீ. தியாகராஜனின் தந்தை ஏ.என். வீராசாமி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை. அக். 11 -

சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன், வீ. ஜெயபால், 3வது வட்ட பிரதிநிதி வீ. தனபால், வீ. தனசேகர், வீ. தேவி தனலட்சுமி ஆகியோரின் தந்தையாரும், என். பிரபு அவர்களின் மாமனாருமான திருவொற்றியூர் மேற்கு பகுதி, எண்ணூர் அன்னை சிவகாமி நகர் 3வது வட்டத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி ஏ.என். வீராசாமி (வயது 80) அவர்கள், உடல்நலக் குறைவு காரணமாக 09.10.2026 அன்று காலை 10 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்

தகவல் அறிந்ததும் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள் தாசன் கழகத் தோழர்களுடன் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.



உடன் மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் ஜி. சந்திராபோஸ், பகுதி பொருளாளர் எம். வஜ்ரவேல், மாவட்ட பிரதிநிதி எம். சந்திரகுமார், பொன். கோ. விஜயன், மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவகுமார், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், பகுதி பிரதிநிதிகள் வை. சின்னையன், எம். கார்த்திக், எஸ். ராஜேஷ், ஆர். நரேன்குமார், எஸ். ஜோயல், மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

காட்பாடி அருகே

16 வயது சிறுமியை மிரட்டி பாலியல் வன்கொடுமை!

த.வெ.க. ஆட்சியில் தொடரும் அச்சுறுத்தல்!

வேலூர்,அக்.11-

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே 16 வயது சிறுமியை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தவெக ஆட்சியில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துள்ளது பொதுமக்களை அச்சத்திற்குள்ளாக்கி உள்ளது.

வேலூர் மாவட்டம் ஏரந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்தவர் ஹரி என்ற 45 வயது நபர், வெல்டிங் தொழில் செய்து வருகிறார். இவர், அதே பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமிக்கு உறவினர் ஆவார். இந்நிலையில், அந்த சிறுமி, இவரது வீட்டிற்கு வந்தபோது, மிரட்டி

பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதில் பாதிக்கப்பட்ட சிறுமி கர்ப்பமடைந்த விவகாரம் அப்பகுதி மக்களுக்கு தெரியவந்தது. உடனடியாக பொதுமக்கள் மற்றும் உறவினர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நல உதவி எண்ணான 1098-க்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் சம்பந்தப்பட்ட இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்திய குழந்தைகள் நலத்துறை அலுவலர்கள் மேல் நடவடிக்கைக்காக காட்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த காட்பாடி அனைத்து மகளிர் போலீசார், ஹரி மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(09.10.2026)



மக்கள் விரோத விஜய் ஆட்சியில் நேற்றய நாளிதழ்களில் வெளிவந்த கொலை, கொள்ளை, கற்பழிப்பு , பாலியல் சீண்டல் உள்ளிட்ட மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு செய்திகளில் ஒரு சில செய்திகள் மட்டும் மக்கள் பார்வைக்காக....

1. நெல்லை சுப்பையாபுரம் அருகே முன்விரோதம் காரணமாக வாலிபர் வெட்டிக் கொலை ...

2. ராமநாதபுரம் மாவட்டம் வாலந்தரவை, கிராமத்தைச் சேர்ந்த நிதி நிறுவன ஊழியர், கடன் தொகையை திரும்பக் கேட்ட காரணத்தால், வெட்டிக் கொலை செய்து கடற்கரையில் புதைத்த கொடூரம் ...

3. திருவள்ளூர் மாவட்டம் செவ்வாய்பேட்டை அருகே மது போதையில் ஏற்பட்ட தகராறில் நண்பர்கள் கல்லால் தாக்கியதில் வாலிபர் மரணம் ...



4.வேலூரில் டி.எஸ்.பி. மீது மனைவி புகார், வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருந்ததை தட்டி கேட்டதால், அடித்து உதைத்து துன்புறுத்துவதாக புகார் ..

5. நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூரில் பிளஸ் ஒன் மாணவியிடம் பலாத்காரம் செய்த வாலிபர் சிக்கினார் ...

6. நெல்லை, பேட்டை பகுதியில் , பிளஸ் டூ மாணவியை செல்போனில் படம் எடுத்து, அதனைக் காட்டி மிரட்டி , கூட்டுப் பலாத்காரம் செய்த மூன்று சிறுவர்கள் சிக்கினர் ....



7. கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் வழக்கறிஞர் சங்கத் தலைவருக்கு சரமாரியாக அரிவாள் வெட்டு...

8. சென்னை கோயம்பேடு 100 அடி சாலையில் வேகமாக சென்ற லாரி டிரைவரை தட்டிக் கேட்டதால், கார் டிரைவருக்கு அரிவாள் வெட்டு ...

9. சென்னை கொளத்தூரில் ஜ.சி.எஃப் ஊழியரை வழிமறித்து அறிவாளால் வெட்டி செல்போன் மற்றும் பணம் பறிப்பு ....

10. கொடுங்கையூரில் டாஸ்மாக் கடையில் வரிசையில் நின்று மது வாங்குவதில் தகராறு , அடிதடி ரகளை, குடிமகன்கள் ஓட்டம் ...

11. நாகை மாவட்டம் சீர்காழி அருகே தென்பாதி கிராமத்தில் சாலையில் நான்கு பெட்ரோல் குண்டுகள் வீச்சு - பரபரப்பு ...



12. கேரளாவில் இருந்து தடை செய்யப்பட்ட பான் மசாலா குட்காவை கடத்தி வந்த தென்காசி மாவட்ட இளைஞர் காங்கிரஸ் நிர்வாகி மற்றும் இருவர் சிக்கினர் ...

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நாமக்கல் பி.குப்புசாமி

அக்டோபர் 11 (2002)



இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வால்பாறை பூ.ஏ.நவாஸ்கான்

அக்டோபர் 11 (2008)



இளமைப் பருவத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர்.

கோவை மாவட்டத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், ஒன்றிய அவைத்தலைவராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

1989ல் கழக ஆட்சியில் வால்பாறை நகராட்சியில் அரசு உறுப்பினராக தலைவர் கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

தலைவர் கலைஞர்மீது உள்ள பற்றால் எதிர்க்கட்சியின் தாக்குதலுக்கிடையிலும் 1973 முதல் "கலைஞர் உணவகம்" வால்பாறையில் நடத்தியவர்.

வால்பாறை பெரியபள்ளிவாசல் முத்தவல்லியாகவும் – வால்பாறை வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.